# சங்க இலக்கியத்தில் பூக்களும் மக்களின் வாழ்வும்

# Flowers and People's Lives in Sangam Literature

***முனைவர் மா. சங்கரேஸ்வரி***
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
கோ.வெங்கடசுவாமி நாயுடு கல்லூரி
(தன்னாட்சி), கோவில்பட்டி

**Dr. M. Sankareswari**
*Assistant Professor, Department of Tamil*
*K. Venkataswamy Naidu College (Autonomous)*
*Kovilpatti*

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்ககால மக்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தனர். இயற்கையில் ஒன்றானது பூவாகும். அப்பூக்கள் மக்களின் வாழ்க்கையின் உணர்வோடு ஒன்றொடு ஒன்று பின்னியிருந்தன. மங்கலத்தின் அடையாளமாக இவற்றைக் கருதினர். அன்றாட வாழ்வில் நடைபெறும் எல்லா நிகழ்விலும் பூக்களைப் பயன்படுத்தினர். சங்க காலத்தில் பூக்கள் மக்கள் வாழ்வில் எவ்வாறு சிறப்பிடம் பெற்றிருந்தது என்பதை இங்குக் காண்போம்.*

***முக்கியச் சொற்கள்:***

*சங்க இலக்கியம், அக வாழ்க்கை, களவு வாழ்க்கை, மடலேறுதல், கற்பு வாழ்க்கை, மலர்கள்*

**Abstract**

*The people of the Sangam period lived in harmony with nature. One of nature is the flower. Apocalypse is the life of the people; Were consciously intertwined with each other. These were considered a sign of blur. Flowers were used in every event that took place in daily life. Here we will see how flowers were prominent in the lives of the people during the Sangam period.*

***Keywords:***

*Sangam Literature: Internal Life, Love Life, Madaleruthal, Chastity Life, Flowers*

**Citation**

Sankareswari, M. "Flowers and People's Lives in Sangam Literature." *Journal of Tamil Culture and Literature*, vol. 1, no. 4, 2022, pp. 96–102.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.20136404*

**அகவாழ்க்கை - களவு வாழ்க்கை**

**பூத்தருதல்**

*சங்க காலத்தில் தலைவன் தலைவிக்குப் பூத்தருவது இயல்பாகும். இதனை கையுறை என்று கூறுவர். வேறுயாரிடமிருந்தும் தலைவி பூவினைப் பெறமாட்டாள். தலைவனிடமிருந்து மட்டுமே உரிமையுடன் பூவினைப் பெறுவாள். ஏனெனில் அவனுக்கு மட்டுமே அவ்வுரிமை உண்டு. சுனையில் பூக்கக்கூடிய நீர்மலர்களில் நீலமும் ஒன்றாகும். அவ்நீல மலர்களைப் பறித்துத் தருமாறு தலைவனிடம் தலைவி கேட்டாள். அவனும் அவளுக்குப் பறித்துக்கொடுத்தான். நீலப்பூவைக் காரணமாகக் கொண்டு இருவரும் தாமே தலைப்பட்டனர் என்று கூறி அறத்தொடு நிற்றால் தோழி. பூப்பறித்து கொடுத்த தலைவனுக்கே தலைவி உரிமையுடையவள். இதனை,*

***"பைங்கண் மாச்சுனை பல்பிணி அவிழ்ந்த***
***வள்இதழ் நீலம் நோக்கி, உள் அகைபு***
***..***
***பழுதுஅன்று அம்ம, இவ்ஆயிழை துணிவே" (குறுந்.366:4 -7)***

*என்ற அடிகள் வலியுறுத்துகின்றன. மேலும், தலைவன் நாட்டு மலையிலிருந்து, மழையின் ஆற்று வெள்ளத்தில் அடித்து வரப்பட்ட கிழங்குடன் கூடிய காந்தள் மலரை தலைவி ஏற்றாள். அதனை தன் இல்லத்தில் நட்டு பாதுகாத்து வளர்த்தாள். ஏனெனில் தலைவன் தலைவியை முதலில் சந்திக்கும் போது காந்தள் பூவினை அளித்தான். அதனால் அப்பூவின் மீது நாட்டம் கொண்டாள். தலைவனோடு தொடர்புடைய பொருள்கள் ஏதுவாயினும் உவகையடைவதும் பாராட்டுவதும் இயல்பாகும். இது காதலர்களின் இயல்பாகும்.*

**மணநாளை உணர்த்துதல்**

*குறிஞ்சி நில மக்கள் வேங்கைப் பூ மலரும் காலத்தைத் திருமணத்திற்கு உகந்த நாளாகக் கருதுவர். குறிஞ்சி நிலத் தலைவி தினைப்புனம் காக்க செல்வது வழக்கமாகும். தினைப்புனம் காப்பது அவளுக்கு உரித்தாகும். தினைப்புனம் காக்கும் போது தலைவனுடன் காதல் வயப்படுவாள் தலைவி. களவொழுக்கம் தினைப்புனத்தில் பகற்குறியீடாக நீடிக்கும். தினைப்புனம் முற்றி அறுவடைக்குப் பின் தலைவியை அனுப்பமாட்டார்கள். அதனால் தலைவனைக் காணாது தலைவி உடல்மெலிவுற்று காணப்படுவாள். இந்நிலையில் வெறியாட்டு நிகழ்த்தும் சமயத்தில் தோழி அறத்தொடு நிற்பாள். அதன் பின் தலைவியை தலைவனுக்குத் திருமணம் செய்து வைப்பது பழக்கமாகும். இக்களவொழுக்கம் கற்பாய் மாறும். இதனை,*

***"மன்ற வேங்கை மணநாட் புத்த***
***மணிஏர் அரும்பின் பொன்வீ தாஅய்***
***வியல்அறை வரிக்கும் முன்றில்" (அகம்.232:7 - 9)***

*என்ற அடிகள் புலப்படுத்துகின்றன.*

**களவு வெளிப்படல்**

*சங்க கால மக்கள் வாழ்வில் மலர்கள் முக்கிய இடம் பெற்றிருந்தன. அகம், புறம் ஆகிய இரு வாழ்க்கையிலும் மலர் சூடினர். அகவாழ்க்கையில் திருமணமகாத பெண்கள் மலர் அணிவதில்லை. களவொழுக்கம் மேற்கொள்ளும் தலைவி களவு வெளிப்பட மலர் ஒரு காரணமாக அமைந்தது. தலைவன் களவொழுக்கத்தில் சூடிய பூவை கூந்தலுக்குள் மறைத்து வைத்து இல்லத்திற்கு வந்தாள் தலைவி. அப்போது கூந்தல் அவிழ்ந்து பூ அவளது அன்னையின்*

*முன் வீழ்ந்தது. இதனை,*

***"புல்லினத்து ஆயர்மகன் சூடி வந்தது ஓர்***
***முல்லை ஒருகாழும் கண்ணியும் மெல்லியால்!***
***கூந்தலுள் பெய்து முடித்தேன்மன் தோழி!யாய்***
***வெண்ணெய் உரைஇ விரித்த கதுப்போடே***
***அன்னையும் அத்தனும் இல்லரா யாய் நாண***
***அன்னைமுன் வீழ்ந்தன்றப் பூ" (கலி.115:4- 9)***

*என்ற அடிகள் வழி அறியலாம்.*

**மடலேறுதல்**

*எருக்கம், ஆவிரைப் பூவை மக்கள் யாரும் சூடுவதில்லை. இன்றைய காலத்தில் விநாயகருக்கு எருக்கம் மாலையை அணிந்து வழிபடுவார்கள். ஆனால் சங்க காலத்தில் காதல் நிறைவேறாத தலைவன் எருக்கம், ஆவிரை மாலையை அணிந்து மடலேறுவதாக சான்று உள்ளது. களவொழுக்கம் மேற்கொள்ளும் தலைவன் தலைவியைப் பெற விரும்பி மடல் ஏறுதல் மரபாகும். மடல் ஏறுதலைப் பெரும்பாலும் தவிர்க்க எண்ணுவான். முடியாத சூழ்நிலையில் இம்மடலேறுதல் நடக்கும். மடலேறும் தலைவன் எருக்கம், ஆவிரை போன்ற மலர்களை அணிந்திருப்பான். இதனை,*

***"பொன்நேர் ஆவிரைப் புதுமலர் மிடைந்த***
***பல்நூல் மாலைப் பனைபடு கலிமா" (குறுந்173:1 - 2)***
***"அணி அலங்க ஆவிரைப் புவோடு எருக்கின்***
***பிணையல் அம் கண்ணி மிடைந்த" (கலி.139:8 -9)***

*என்ற அடிகள் வழி அறியலாம்.*

**கற்பு வாழ்க்கை - முல்லை சான்ற கற்பு**

*ஐவகை நிலங்களில் முல்லை நிலத்தில் மட்டும்தான் முதலில் கற்புநெறி தோன்றியது எனலாம். முல்லைப்பு கற்புக்கு அடையாளமாகக் காட்டப்பட்டுள்ளது. முல்லை நிலத்தில் உள்ள தலைவி "முல்லை சான்ற கற்பினள்" என்று அழைக்கப்படுகின்றாள். முல்லைப்பூவானது தூய்மையானது, மென்மையானது. இவை ஒன்றைப் பற்றுக்கோடாகக் கொண்டு வளரும் தன்மையுடையது. கொம்பு இருந்தால் மட்டுமே மேல்நோக்கி வளரும் இல்லையெனில் அவை கீழே படர்ந்து சரியாக வளராது. இதைப்போலவே இல்லறத்தில் உள்ள தலைவியும் தலைவனைப் பற்றாகக் கொண்டு இல்லறம் நடத்துவாள். அவன் இல்லையெனில் வாழ்க்கை இல்லை எனலாம். அதுமட்டுமின்றி தன் தலைவன் கூறிச் சென்ற சொல்லுக்காக இல்லத்தில் இருந்து கொண்டு நல்லறம் செய்து அவன் வரவை எண்ணி ஆற்றியிருந்ததால் கற்பு வலியுறுத்தப்படுகின்றது. இதனை,*

***"தண்நறும் புறவி னதுவே - நறுமலர்***
***முல்லை சான்ற கற்பின்***
***மெல்இயற் குறுமகள் உரைவுஇன் ஊரே" (அகம்,274:12 -14)***

*என்ற அடிகள் வலியுறுத்துகின்றன.*

**தலைவன் வரவை உணர்த்துதல்**

*கற்பு வாழ்க்கையில் பொருள்வயின் பொருட்டோ வினைவயின் பொருட்டோ தலைவன் பிரிந்து செல்வான். அவ்வாறு பிரிந்து செல்லும் போது தலைவியை ஆற்றுவிக்க தான் குறித்த பருவத்தில் வருவதாகக் கூறிச் செல்வான். அவன் வருவதாகக் கூறிச் சென்ற பருவம் கார், பனி, இளவேனில் பருவங்களாகும். இப்பருவங்களை தலைவி மலர்கள் பூக்கும் நிலையை வைத்து அறிந்து கொள்வாள். முல்லை, கொன்றை, காயா, குருந்தம் மலர்கள் கார்கால வரவையும் கோங்கம் இளவேனிற் பருவ வரவையும் பகன்றை பனிக்கால வரவையும் தலைவிக்கு உணர்த்தும் என்பதை சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.*

**தலைவியை ஆற்றுவித்தல்**

*குருந்தம் பூ கார்காலத்தில் மலரும் தன்மையுடையது. தலைவன் கொன்றை, குருந்து ஈனும் பருவத்தில் வருவதாகக் கூறிச் செல்கின்றான். அவை போது ஈன்றவுடன் கார்காலம் வந்தது என்று தலைவி நினைக்கின்றாள். கொன்றையின் முகையும், குருந்தின் முகையும் பெருந்தண்மையால் மழை பெய்யும் காலத்தில் மலராமல் இருந்தது. இதனைக் கண்ட தோழி தலைவியிடம் இது கார்ப்பருவம் அன்று என்று கூறி ஆற்றுவிக்கின்றாள். இதனை,*

**"*காசின் அன்ன போது அன் கொன்றை***
***குருந்தொடு அலம்வரும் பெருந்தண் காலையும்***
***கார் அன்று என்றி ஆயின்" (குறுந்.148:3- 5)***

*என்ற அடிகள் வழி அறியலாம்.*

**பிரிவில் பூச்சூடாமை இருத்தல்**

*கற்புகாலத்தில் பொருள்வயின் பொருட்டோ அல்லது வினைவயின் பொருட்டோ தலைவன் பிரிந்து செல்வான். பிரிந்து சென்ற தலைவனை எண்ணி தலைவி கூந்தல் பூனையாமல் பூச்சூடாமல் இருப்பாள். ஏனெனில் தன்னை அழகுப்படுத்திக் கொள்வது தலைவனுக்காக மட்டுமே என்ற எண்ணம் மேலோங்கி இருப்பதுதான் பிரிவின் போது பூச்சூடாமல் இருப்பதற்கு காரணம். இதனை,*

**"*போதவிழ் கூந்தலும் பூ விரும்பு காவே" (ஐங்.96)***

*என்ற அடி உணர்த்துகின்றது. மேலும், மீண்டு வந்த தலைவன் தலைவி கூந்தலில் பூச்சூட்டி மகிழ்வான் என்பதை,*

**"*பனிவார் கண்ணள் பல புலந்து உறையும்***
***ஆய் தொடி அரிவை கூந்தல்***
***போது குரல் அணிய வேய்தந்தோயே" (அகம்,104:15 - 17)***

*என்ற அடிகள் வழி அறியலாம்.*

**கைம்மை பெண்டிர் புச்சூடாமை**

*கணவனை இழந்த மகளிர் கூந்தலில் பூக்கள் சூடும் பழக்கம் இன்றும் வழக்கில்லை. சங்க காலத்தில் கணவன் இறந்தவுடன் மனைவி உடன்கட்டை ஏறுவாள். அவ்வாறு ஏறவில்லையெனில் கைம்மை நோன்பு இருப்பாள். கைம்மை நோன்பு என்பது கூந்தலை மழித்து, உப்பின்றி சமைத்து உண்டு, பரல்கற்கள் பரப்பிய படுக்கையில் துயின்று தன் காலத்தைக் கழிப்பதாகும். கணவன் இறந்தவுடன் தலை மழிக்கப்படுவதால் (கூந்தல் களைவதால்) புச்சூட முடியாது. இதனை,*

***"ஒள் நுதல் மகளிர் கைம்மை கூர,***
***அவிர் அறல் கடுக்கும் அம் மென்***
***குவை இருங் கூந்தல் கொய்தல் கண்டே" (புறம்25:12 - 14)***
*என்ற அடிகள் வழி அறிய முடிகிறது.*

**புறவாழ்க்கை**

**நிலத்தை அடையாளப்படுத்துதல்**

*பண்டைத்தமிழர்கள் வாழ்ந்த நிலப்பகுதியை ஐவகை நிலமாகப் பகுத்துக் கூறுவர். ஒவ்வொரு நிலத்திற்கும் பெயரிட்டுள்ளனர். அப்பெயர்கள் அந்நிலத்தில் பூக்கும் பூவின் அடிப்படையில் இருக்கின்றது. அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பதாகும். ஒவ்வொரு நிலத்திலும் பல மலர்கள் பூப்பினும் மலரின் சிறப்பு காரணமாக இப்பெயர் வைத்திருக்கக்கூடும். பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கின்ற குறிஞ்சிப்பூ, தலைவன் வரவு மற்றும் மகளிரின் கற்புக்கு அடையாளமான முல்லைப்பூ.*

**மன்னன் குலக்குறியீடு**

*புறவாழ்க்கையில் போர் மேற்கொள்ளும் போது வீரர்கள் பூச்சூடுவது மரபு. புறத்திணையில் பூவை நிலை என்று ஒன்று உள்ளது. புவை நிலை என்பது மன்னன் போருக்காகச் செல்லும் போது தன் அடையாள மாலையை அணிந்து, தன் வீரர்களுக்கும் பூவை அளிப்பது ஆகும். மூவேந்தர்களுக்கும் தன் குலங்களை அடையாளப்படுத்த பூ ஒன்று உள்ளது. சோழனுக்கு அத்திப்பூ, சேரனுக்கு பனம் பூ, பாண்டியனுக்கு வேப்பம்பு என்பதாகும். அதுமட்டுமின்றி ஐவகை நிலங்களிலும் வீரர்கள் தங்களுக்கென மலர் அணிந்து போருக்குச் செல்வதும் உண்டு. ஆநிரை கவரும் போது வெட்சி வீரர்கள் வெட்சிப்புவை சூடுதல். ஆநிரை மீட்கும் போது கரந்தை வீரர்கள் கரந்தைப்பு சூடுதல் மரபாகும்.*

**புக்களின் மகரந்தத்தை உரமாகப் பயன்படுத்துதல்**

*காஞ்சி மரம் மருத நிலத்தில் வளரும் தன்மையுடையது. இது குறுகிய தன்மையுடைய மரமாகும். இளவேனிற் காலத்தில் மலர்ந்து உதிரும் தன்மையுடையது. காஞ்சி மரத்தின் பூக்கள் மாலை போல புக்கும். இவை நறுமணம் மிகுந்தவையாகும். இப்பூக்களில் மகரந்தம் அதிகமாக இருக்கும். இம்மகரந்தத்தாதுக்கள் வயல்களுக்கு உரமாகப் பயன்படும். உழவர் இம்மரத்தின் பூக்களை வயலில் உதிப்பார்கள. இதனை,*

***"பயறு போல் இணர பைந்தாது படீஇயர்***
***உழவர் வாங்கிய கமழ்பு மென்சினைக்***
***காஞ்சி ஊரன் கொடுமை" (குறுந்.10:2- 4)***
*என்ற அடிகள் குறிப்பிடுகின்றன.*

**தெய்வங்களுக்குப் பூக்களை உவமையாகக் கூறுதல்**

*பண்டைக்காலம் தொட்டு இக்காலம் வரை மக்களின் வாழ்க்கையோடு சமயம் ஒன்றிணைந்ததாகக் காணப்படுகிறது. ஒவ்வொரு சமயத்தவரும் தங்களுக்கென்று ஒரு தெய்வங்களை வழிபட்டு வருகின்றனர். சங்க காலத்தில் ஐவகை நிலங்களில் வாழ்ந்த மக்கள் தங்களுக்கென்று தெய்வங்களை வணங்கி வந்தனர். குறிஞ்சி - சேயோன், முல்லை - மாயோன், மருதம் - வேந்தன், நெய்தல் - வருணன், பாலை - கொற்றவை என்று ஒவ்வொரு*

*நிலத்திலும் தெய்வ வழிபாடு நிகழ்ந்துள்ளது. ஒவ்வொரு தெய்வத்திற்கும் உருவ வழிபாடு உண்டு. அவ்வகையில் ஒவ்வொரு பூவின் நிறத்திற்கும் ஒரு தெய்வம் உவமையாகக் கூறப்பட்டுள்ளது. வெண்கடம்பூ பூவிற்கு பலதேவனும், ஞாழலுக்கு சாமனும், செருந்திக்கு கதிரவனும், மாயவனுக்கு தளிர்களும் உவமையாக்கப்பட்டுள்ளது. இதனை,*

***"ஒருகுழை ஒருவன் போல்! இணர் சேர்ந்த மராஅமும்***
***பருதிஅம் செல்வன் போல், தனை உழ்த்த செருத்தியும்***
***மீன் ஏற்றுக் கொடியோன் போல், மிஞிறு ஆர்க்கம் காஞ்சியும்***
***ஏனோன் போல், நிறம் கிளர்பு கஞலிய ஞாழலும்" (கலி.26:1- 4)***

*என்ற அடிகள் எடுத்துரைக்கின்றன.*

**வழிபாட்டில் மலர்கள்**

*தெய்வத்தை வழிபடும் போது மலர்களைத் தூவியும் மலர்மாலை சூட்டியும் வழிபடுவது முறையாகும். முல்லைப்பாட்டில் நெல்லோடு மலர்த்தூவி தெய்வத்தை வணங்கி நிலையையும் குறுந்தொகையில் வெறியாட்டின் போது கடம்ப மரத்தை கடவுளாகக் கொண்டு மாலை அணிவித்து வழிபட்ட நிலையையும் இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது.*

**கார்த்திகை விழா**

*கார்த்திகை மாதத்தில் நடைபெறும் விழா கார்த்திகைத் திருவிழா ஆகும். இவ்விழாவில் தீபம் ஏற்றி வழிபடுவது முறையாகும். இலவம் பூக்கள் மலர்ந்து இருப்பது நெருப்புக்கு ஒப்பாகக் கூறுவர். இம்மரம் மலரும்பொழுது இலைகளை முழுவதுமாக உதிர்த்துவிடும். பூக்களும் மொட்டுக்களும் மட்டுமே சினைகளில் (கிளைகளில்) காணப்படும். பூக்களின் நிறம் மலை மீது சுடர் விட்டெரியும் தீப்போல் தோன்றும். இதனை,*

***"எரிப் பூ இலவத்து ஊழ் கழி பல் மலர்" (ஐங்.368:1)***
***"எரிஉரு உறழ இலவம் மலர்" (கலி.33:10)***

*என்ற அடிகள் புலப்படுத்துகின்றன. அதுமட்டுமின்றி கார்த்திகை விளக்கிற்கு இலவம் புக்களை உவமையாக அகநானூறு கூறுகின்றது.*

**அகப்புற வாழ்க்கை**

**பூச்சூடும் உரிமை**

*மகளிர் தங்களுடைய கூந்தலில் காட்டுமல்லி, வெண்கடம்ப மலர், முல்லை மலர், நரந்தம், பாதிரி, செங்கழுநீர் போன்ற மலர்களைச் சூடினர். நன்கு ஒப்பனை செய்யப்பட்ட கூந்தலில் மலர் சூடிவது மரபாகும். "கஸ்தூரிக் குழம்பு, நறுமணசாந்திட்டுக் கூந்தலை ஒப்பனை செய்து முடித்த பின்பு மலரணிதல் முக்கிய வழக்கம்" என்று இந்திரா சோமசுந்தரம் குறிப்பிடுகிறார். (இலக்கியக் கட்டுரைகள், இந்திரா சோமசுந்தரம், ப.19)*

*பூச்சூடுதல் என்பது அகவாழ்க்கையில் களவு காலத்திலும் கற்பு காலத்திலும் நடைபெற்றது. திருமணமகாத பெண்கள் கூந்தலில் மலரணியும் பழக்கம் வழக்கில்லை. ஆனாலும் களவுகாலத்தில் தலைவன் தலைவிக்கு யாருக்கும் தெரியாதவாறு பூச்சூட்டி மகிழ்வான். இதனால் அவளது கூந்தலில் மலர் மணம் வீசும் என்பதை,*

***"நரந்தம் நாறும் கவை இருங்கூந்தல்" (குறுந். 53:3)***
***நரந்தம் நாறு இருங்கூந்தல்" (கலி, 54:5)***

*என்ற அடிகள் வாயிலாக அறிய முடிகிறது.*

*திருமணத்தின் போது தலைவிக்கு ஊர்மக்கள் அனைவரின் முன்பும் தலைவன் பூச்சூடுவான். அதன்பின் தலைவி பூச்சூடும் உரிமையைப் ஊரறிய பெறுகின்றாள். இதனை,*

***"நன்மனை வதுவை அயரவிவள்***
***பின்னருங் கூந்தல் மலரணிந் தோயே" (ஐங்,294:4- 5)***

*என்ற அடிகள் உணர்த்துகின்றன. இன்றைய காலத்தில் திருமணம் செய்துவிக்கும்போது தலைவி தலைவனுக்கு உரியவள் என்று புவைக்கும் பழக்கம் நடைமுறையில் இருக்கின்றது. இது திருமணத்திற்கு முன் நடக்கும் சடங்காகும்.*

*தலைவன் தலைவிக்கு பூச்சூடுவது மட்டுமின்றி பெண்களும் தங்களாகவே மலர் சூட்டிக் கொள்வர். தங்களின் கூந்தலில் மலரணிவது மங்கலமாகக் கருதினர். சில மலர்களை மங்கலம் கருதி கூந்தலில் சூடியிருந்ததை,*

***"கூந்தல் மகளிர் கோதை புனையர்***
***பல்இருங் கூந்தல் சில்மலர் பெய்ம்மார்" (நெடுநல்,53 - 54)***

*என்ற அடிகள் எடுத்துரைக்கின்றன.*

**மாலை அணிதல்**

*கூந்தலில் மட்டுமின்றி பூக்களை மாலையாகத் தொடுத்து அவற்றை கழுத்தில் அணியும் பழக்கம் உள்ளது. ஆண், பெண் இருவரும் மாலை அணிவதற்கு உரியவர்கள். தும்பை மலர் போருக்காகச் செல்லும் போது தும்பை வீரர்கள் அணிந்து செல்வது வழக்கம். ஐங்குறுநூறு இளமகள் ஒருத்தி தும்பை மாலை அணிந்திருந்தாள் என்பதைக் குறிப்பிடுகின்றது.*

**நிறைவாக**

*களவு, கற்புக் காலங்களில் தங்களின் இன்ப, துன்ப நிலையை வெளிப்படுத்தக்கூடிய ஒரு குறியீடாக மலர் இருந்துள்ளதையும் பூச்சூட்டும் உரிமை தலைவனுக்கு மட்டுமே உள்ளது என்றும் அறிய முடிகிறது. புறவாழ்க்கையில் ஆண்கள் வீரத்தின் பொருட்டும் தன் அடையாளத்தன்மைக்காகவும் பூச்சூடியமையையும் காண முடிகிறது.*

**பார்வை நூல்கள்**


1. *சாமிநாதையர் டாக்டர் உ.வே. குறுந்தொகை மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சாமி நாதையர் நூல் நிலையம், சென்னை - 600 090. எட்டாம் பதிப்பு - 2020.*
2. *சுப்பிரமணியன் முனைவர் ச.வே. தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 600108. ஆறாம் பதிப்பு நவம்பர், 2003.*
3. *மாணிக்கம், வ.சுப. தமிழ்க்காதல், மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம் - 608 001. முதற்பதிப்பு: மே, 2002.*
4. *வேங்கடராமன் வித்துவான் டாக்டர் ஹெச். (பதி) நற்றிணை மூலமும் உரையும், உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை - 600 090. எட்டாம் பதிப்பு - 2020.*


## References


1. *V.Suba. Manikkam, 2005, Tamil Kadhal, Meiappan Pathippagam, Chidhambaram*
2. *N.Subramaniyan, 2010, Sanga kala Vazviyal, New Century Book house, Chennai*
3. *P.Venkateswari, 2018 Palantamilar Panpattu Marabukal, Parithi Pathipagam, Joar Pet.*